# இந்தியத்துணைத்தூதரகம்

## யாழ்ப்பாணம்

***

## ஊடக அறிக்கை

யாழ். இந்திய துணைத் தூதரகமானது, “ஆசாதி கா அம்ரித் மஹோற்சவ்” கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா முனைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் 90-வது பிறந்தநாளை இன்று (ஒக்டோபர் 15, 2021) கொண்டாடியது. யாழ் பொது நூலகத்தின் “ இந்தியா கார்னரில்” அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு யாழ் இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் அவர்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். வடக்கு மாகாண சபையின் மாண்புமிகு அவைத் தலைவர் திரு. சீ.வி.கே.சிவஞானம், யாழ். மாநகர முதல்வர் மாண்புமிகு வி.மணிவண்ணன், இந்திய துணைத்தூதரக அதிகாரிகள், தலைமை நூலகர், நூலக உத்தியோகத்தர்கள் மற்றும் நூலகத்தின் வாசகர்களும் நிகழ்வில் கலந்து கொண்டு மாலை அணிவித்தும் மலர் தூவியும் மரியாதை செலுத்தினர்.

2. யாழ் இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் அவர்கள் தனது உரையில் பாரத ரத்னா முனைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் அறிவியல் பங்களிப்புகளையும், இந்திய விண்வெளி ஆய்வுத் துறையை மாற்றியமைத்த அவரது யோசனைகள், கண்டுபிடிப்புகள் மற்றும் அவரது கற்பித்தல் முறைகள் உலகெங்கிலும் உள்ள இளம் மனங்களை எவ்வாறு தொடர்ந்து உயிரூட்டிக் கொண்டிருக்கிறது என்பதனையும் எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சியில் இந்தியா கார்னரின் இசை வகுப்பு மாணவர் பாரத ரத்னா முனைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் கவிதைகளை வாசித்தார்.

3. கொவிட்-19 குறித்த உள்ளூர் சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றி நிகழ்வுகள் நடத்தப்பட்டன. நிகழ்வுகளின் புகைப்படங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன.

15 ஒக்ரோபர் 2021
யாழ்ப்பாணம்

*****